IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2018 |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Amirtham | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **09-01-2023**

குறுக்கு விசாரணை (வா.சா.2 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை (2, 3 பிரதிவாதிகள் தரப்பில்) : 09-01-2023**

உங்களுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் உலகநாதன், ஹேமலதா, ஜெகநாதன் ஆகியோர்கள் ஆவார்கள். வழக்கு சொத்து உங்கள் மகன்கள் இருவர்கள் மட்டும் தான் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் ஆம். வழக்கு சொத்தில் உள்ள கிணறு மற்றும் மின் மோட்டார் ஆகியவை யாருடைய பெயரில் உள்ளது என்றால் என்னுடைய கணவர் பெயருக்கு இருந்து அவருக்கு பின் எனது பெயரில் உள்ளது, அவ்வாறு என் பெயரில் உள்ள மின் இணைப்பை என் அனுமதியில்லாமல் மின் உரிமை மாற்றம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டதை பொறுத்து ஆட்சேபணை செய்தேன். கூட்டுசொத்தில் உள்ள மின் இணைப்பை பொறுத்த வரை அனைத்து தரப்பினர்களின் கையொப்பம் பெற்று தான் தனி மின் இணைப்பாக மாற்றம் செய்ய முடியும் என்றும், அவ்வாறு 2, 3 பிரதிவாதிகள் அலுவலகத்தில் கையொப்பம் செய்யப்பட்டு தான் மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

உங்களுடைய இரு மகன்களும் சொத்துக்களை பொறுத்து ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார்களா என்றால் ஆம் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாதி ஜெகநாதன் அவர்களால் வழக்கு சொத்தில் உள்ள உழவடையை பொறுத்து உலகநாதனிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் முதல் 3 வருடத்திற்கு உலகநாதன் உழவடை செய்திட வேண்டியது என்றும், அடுத்து 3 வருடத்திற்கு ஜெகநாதன் உழவடை செய்திட வேண்டியது என்றும் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். வழக்கு சொத்தில் உள்ள மின் மோட்டாரின் இணைப்பு மற்றும் கிணறு யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய கணவர் பெயரில் உள்ளது, ஆனால் என் கணவர் பெயரில் உள்ள மின் இணைப்பு மற்றும் கிணற்றை பொறுத்த வரை உலகநாதன் எனக்கு தெரியாமல், என்னிடம் அனுமதி பெறாமல் அவர் பெயரில் மாற்றி கொண்டார். மின் இணைப்பு எந்த வருடம் வாங்கப்பட்டது

என்றால் 2000ம் வருடம் ஆகும். பாகப்பிரிவினை ஏற்படுத்தி கொள்ளும் சமயத்தில் உங்களுடைய கணவர் இறந்துவிட்டார் என்றால் ஆம்.

உங்களது கணவர் இறந்ததற்கு பின்பு மின் இணைப்பு யார் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் அவருடைய பெயரிலேயே தான் இருந்தது. வழக்கு சொத்து உள்ள கிணறு மற்றும் மின் இணைப்பானது சர்வே எண்.52/1ஏ மற்றும் 52/1பி ஆகியவை உலகநாதன் பெயரில் இருந்ததால் அவருடைய பெயருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு, பொதுவாக இருந்தது, எங்களுக்கு தெரியாமல் உலகநாதன் மாற்றி கொண்டுள்ளார். முறையான ஆவணங்களை கொண்டு தான் உலகநாதன் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும், அதனால் தான் அவர் பெயருக்கு மின இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறு, பாகப்பிரிவினை ஆவணம் எழுதும் சமயத்தில் உலகநாதன் அவர்களால் மோட்டடார் மற்றும் மின் இணைப்பு ஆகியவற்றில் இருவருக்கும் சரிசமமாக உள்ளதை அவருடைய பெயருக்கு ஆதரவாக ஆவணம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டதை பொறுத்து அன்றைய தினமே என்னால் ஆட்சேபணை செய்யப்பட்டது, அதற்கு அன்றைய தினமே உலகநாதன் அவர்களால் சம்மத பத்திரம் எழுதி கொடுத்தும், பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை பொறுத்த வரை பின்னிட்டு மாற்றம் செய்து கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி நாங்கள் கிணறு மற்றும் மின் மோட்டாரில் உள்ள திருத்தம் செய்ய வேண்டியதை பொறுத்து பின்னிட்டு செய்து கொள்வதாக முடிவு செய்து பத்திர அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். மின் இணைப்பின் எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உங்களுக்கு தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் மின் இணைப்பு எதுவும் உங்களுக்கு தெரியாத நிலையில், தாவாவில் உங்களால் அளிக்கக்கூடிய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல, நிராகரிக்கக்கூடியது என்றால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி